உ

# உயர்வாசற்குன்று முருகன் கோவில்

தொலைபேசி இல: 020 8348 9835
Website: http://highgatehillmurugan.org

பிரித்தானிய இந்து (சைவ) அறங்காவற் குழுவின் முன்னை நாள் தலைவரும், உயர்வாசற்குன்று முருகன் கோவில் தாபகருமான *அமரர் உயர்திரு சபாபதிப்பிள்ளை ஐயா* அவர்களின் ஞாபகார்த்தமாக

# திருவாசக விழா - சமயப் போட்டி

**காலம்: 09.12.2017 சனிக்கிழமை காலை 9.30 மணி**

**இடம்: ஆலய கல்யாண மண்டபம், உயர்வாசற்குன்று முருகன் கோவில்**
**200A Archway Road, London N6 5BA**

## பிரிவு (அ). 5 வயதிற்கு உட்பட்டோர்

விரும்பிய தேவாரம் ஒன்று

## (ஆ). 5 வயதிற்கு மேல் 7 வயதிற்கு உட்பட்டோர்

விரும்பிய தேவாரம் ஒன்று மற்றும் புராணம் ஒன்று

## (இ). 7 வயதிற்கு மேல் 9 வயதிற்கு உட்பட்டோர்

### தேவாரம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

### திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுஞ் திருவாயால் மறைபோலுங்காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ் உயிர்க்கும் இயல்பானான் சாழலோ.



## (ஈ). 9 வயதிற்கு மேல் 11 வயதிற்கு உட்பட்டோர்

### தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

### திருவாசகம்

இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புணல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர் பாடிப் பூவல்லி கொய்யாமோ.

### புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உனைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து
பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

(உ). 11 வயதிற்கு மேல் 13 வயதிற்கு உட்பட்டோர்

தேவாரம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை ஆர் சுழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் ...... கணையாலே
தொல்லைநெடு நீலக் ...... கடலாலே
மெள்ளவரு சோலைக் ...... குயிலாலே
மெய்யுருகு மானைத் ...... தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் ...... தெளிவோனே
செய்யகும ரேசத் ...... திறலோனே
வள்ளல்தொழு ஞானக் ...... கழலோனே
வள்ளிமண வாளப் ...... பெருமாளே.



(ஊ ). 13 வயதிற்கு மேல் 15 வயதிற்கு உட்பட்டோர்.

**தேவாரம்**

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறை அரனே.

**திருவாசகம்**

ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு
அன்பிலை என்பு உருகிப்
பாடுகின்றிலை: பதைப்பதும் செய்கிலை
பணிகிலை : பாதமலர்
சூடுகின்றிலை: சூட்டுகின்றதும் இலை
துணையிலி பிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வது ஒன்று அறியேனே.

**திருவிசைப்பா**

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமேதிருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரி நூல்
தவளுமே முறுவல் ஆடரவந்
துவளுமே கலையுந் துகிலுமே யொருபால்
துடியிடை இடை மருங்கொருத்தி
அவளுமேயாகில் அவரிடங் களந்தை
அணிதிகழாதித்தேதீச் சரமே

**(ஊ).** 13 வயதிற்கு மேல் 15 வயதிற்கு உட்பட்டோர்

**திருப்பல்லாண்டு**

மன்னுகதில்லை.வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

**புராணம்**

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

திருப்புகழ்

| | |
|---|---|
| வசனமிக வேற்றி | மறவாதே |
| மனது துயர் ஆற்றி | லுழலாதே |
| இசை பயில் சடாட்சரம | தாலே |
| இகபர சௌபாக்யம் | அருள்வாயே |
| பசுபதி சிவாக்யம் | உணர்வோனே |
| பழனி மலை வீற்று | அருளும் வேலா |
| அசுரர் கிளைவாட்டி | மிக வாழ |
| அமரர் சிறை மீட்ட | பெருமாளே |



(எ). **15 வயதிற்கு மேல் 20 வரை**

**தேவாரம்**

ஆலந்தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுள்ளானை
எலவார் குழலாளுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

**திருவாசகம்**

நாடகத்தால் உன் அடியார்போல்
நடித்து, நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்,
மிகப்பெரிதும் விரைகிறேன்;
ஆடகச்சீர் மணிக் குன்றே !
இடையறா அன்பு உனக்கு என்
ஊடகத்தே நின்று, உருகத்
தந்தஅருள்; எம்முடையானே!

**திருவிசைப்பா**

திருமகன் முருகன் தேவிமேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை யாரையர் தம் பாவை
தருமலி வளாஞ்சி சிவபுரன் தோழன்
தளபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமேழ்
இருகையி லிருந்த ஈசனுக்கே.

(எ). **15 வயதிற்கு மேல் 20 வரை**

**திருப்பல்லாண்டு**

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நராயணனோடு நான் முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

**புராணம்**

அண்ணலே எனைஆண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின் கோலம்
நண்ணி நான் தொழநயந்தருள்புரியெனப் பணிந்தார்

**திருப்புகழ்**

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வலவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே



# *திருவாசக பரிசளிப்பு விழா*

**காலம்: 16.12.2017 சனிக்கிழமை**

**மாலை 5.00மணி- 9மணி**

**இடம்: ஆலய கல்யாண மண்டபம், உயர்வாசற்குன்று முருகன் கோவில்**

**200A Archway Road, London N6 5BA**

**பரிசளிப்பு,கலை நிகழ்ச்சிகள்,தொடர்ந்து இராப்போசனம்**

